R.O.C.No.7010/2018/C3

DISTRICT & SESSIONS COURTS SARISHTADAR
3227
13 APR 2018
PUDUCHERRY

P.Dis.No.49/2018

Copy of G.O.Ms.No.6, Personnel and Administrative Reforms (Training-I) Department, dated 19.01.2018, is communicated for information and necessary action.

HIGH COURT, MADRAS
DATED : 05.04.2018.

SUB ASST. REGISTRAR (Admn.~~III~~ II)

---

To

1. All the Registrars, High Court, Madras & Madurai Bench of Madras High Court, Madurai.
2. All the Principal District Judges/District Judges.
3. All the Chief Judicial Magistrates.
4. The Principal Judge, City Civil Court, Chennai.
5. The Chief Judge, Court of Small Causes, Chennai.
6. The Presiding Officer, Industrial Tribunal, Chennai.
7. The Administrator General & Official Trustee of Tamil Nadu, Chennai.
8. The Special Judge, Special Court for EC & NDPS Act, Chennai.
9. The Presiding Officers, Principal Labour Court / I Additional Labour Court, Chennai/ II Additional Labour Court / III Additional Labour Court, Chennai.
10. The Additional District Judge and Presiding Officer, Special Court under the Chief Metropolitan Magistrate, Egmore, Chennai.
11. The City Government Pleader, City Civil Court Buildings, Chennai.
12. The Principal Judge / I Additional Principal Judge / II Additional Principal Judge / III Additional Principal Judge / IV Additional Principal Judge / V Additional Principal Judge / VI Additional Principal Judge / VII Additional Principal Judge , Family Court, Chennai.
13. The Principal Judge / Additional Principal Judge / Judge, Family Court, Ariyalur / Coimbatore / Dharmapuri / Dindigul / Erode / Madurai / Udhagamandalam / Salem / Sivagangai /Tiruchirappalli / Tirunelveli / Tiruvallur / Vellore / Villupuram / Virudhunagar @ Srivilliputtur.

-2-

14. The Additional District Judge and Presiding Officer, Principal Special Court Under E.C Act., Chennai / Coimbatore / Madurai / Pudukottai / Salem / Thanjavur.
15. The Presiding Officer, Labour Court, Coimbatore / Cuddalore / Madurai / Salem / Tiruchirappalli / Tirunelveli / Vellore.
16. The Sessions Judge, Sessions Court for Trial of Bomb Blast Cases, Chennai at Poonamallee/Coimbatore.
17. The Director/Additional Director, Tamil Nadu State Judicial Academy, Chennai, Coimbatore and Madurai.
18. The Chairman, Sales Tax Appellate Tribunal, Chennai.
19. The Chiarman, State Transport Appellate Tribunal Chennai - 104.
20. The Chairman,/Judicial Officer,Taxation Appeals Tribunal, Corporation of Chennai, Chennai.
21. The II Additional District Judge (CBI Cases), Coimbatore / Madurai.
22. The I Additional District Judge (PCR), Thanjavur / Tiruchirappalli.
23. The III Additional District Judge (PCR), Madurai / II Additional District Judge (PCR), Tirunelveli.
24. The Sessions Judge, Sessions Court for Trial of Cases relating to Communal Clashes, Madurai.
25. The Special Judge, Special Court under TNPID Act, Chennai / Coimbatore / Madurai.
26. The Sessions Judges, Mahalir Neethimandram, Chennai / Coimbatore / Cuddalore / Madurai / Perambalur / Salem / Tirunelveli / Pudukottai.

**(All the Principal District Judges / District Judges / Chief Judicial Magistrates / Heads of Units are requested to communicate this G.O. to all the Judicial Officers under their control)**

**Copy to**

1. The Section Officer, 'C' Section, Madurai Bench of Madras High Court, Madurai.
2. The Librarian, High Court, Madras and Madurai Bench of Madras High Court, Madurai.
3. The Record Keeper, A.D. Records, High Court, Madras and Madurai Bench of Madras High Court, Madurai.

SPARE 15 COPIES

For communication

HIGH COURT
RECEIVED
25 JAN 2018
MADRAS

சுருக்கம்

பயிற்சி – பார்வைத்திறன் / செவித்திறன் குறைபாடுள்ள மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்களுக்கு பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படும் அடிப்படை பயிற்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி-1) துறை

அரசாணை (நிலை) எண்.6

நாள் 19.01.2018
ஹேவிளம்பி, தை 6
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கப்பட்டது:

1) அரசுக் கடித எண்.89324/86-27, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி-1) துறை, நாள் 24.11.1988.
2) பார்வைக் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளி அரசு ஊழியர் நலச் சங்கத்தின் மனு நாள் 24.05.2017.
3) பயிற்சித் துறைத் தலைவரின் கடிதம் ந.க.எண்.பதுத/150/2017, நாள் 30.10.2017.

*****

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில், ஊன்றுகோல் உதவியால் நடப்பவர்களுக்கும், சக்கர நாற்காலி உதவியுடன் நகருபவர்களுக்கும், தனித்து தனது வேலைகளை செய்ய முடியாத மாற்றுத்திறனாளிகளுக்கும் மட்டுமே பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படும் அடிப்படைப் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்களித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2) மேலே இரண்டில் படிக்கப்பட்ட பார்வைக் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளி அரசு ஊழியர் நலச் சங்கத்தின் கடிதத்தில், கண் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள், தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வாகி பல்வேறு துறைகளில் பணியாற்றி வருவதால், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் ஊன்றுகோல் உதவியால் நடப்பவர்களுக்கும், சக்கர நாற்காலி உதவியுடன் நகருபவர்களுக்கும், தனித்து தனது வேலைகளை செய்ய முடியாத மாற்றுத்திறனாளிகளுக்கும் மட்டும் பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலைத்தில் அளிக்கப்படும் அடிப்படைப் பயிற்சியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதுபோல், கண் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்குமாறு அரசைக் கோரப்பட்டது.

3) பார்வைக் குறைபாடுள்ள மாற்றுத்திறனாளி அரசு ஊழியர் நலச் சங்கத்தின் கோரிக்கை மீது பயிற்சித் துறைத் தலைவர் அவர்களது குறிப்புரை கோரப்பட்டது. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் 100 விழுக்காடு கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுடன், வேறுவகை குறைபாடுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கும் இப்பயிற்சி பெறுவதிலிருந்து விலக்களிக்கலாம் என பயிற்சித் துறைத் தலைவர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4) மேற்காணும், பார்வைக் குறைபாடுள்ள மாற்றுத்திறனாளி அரசு ஊழியர் நலச்சங்கத்தின் கோரிக்கை மற்றும் பயிற்சித் துறைத் தலைவரின் பரிந்துரை ஆகியவற்றை அரசு

தபிபா.

கவனமாக பரிசீலித்தப் பின்னர், அப்பரிந்துரையை பகுதியளவு ஏற்கலாம் என முடிவெடுத்து, கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

(i) 100 விழுக்காடு பார்வைத்திறன் மற்றும் 100 விழுக்காடு செவித்திறன் குறைபாடுள்ள மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்களுக்கு மட்டும் பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படும் அடிப்படைப் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்களிக்கக் கோரும் கருத்துருக்கள் மீது ஆணை பிறப்பிக்க துறைத் தலைவர்களுக்கே அதிகாரம் அளிக்கப்படுகிறது.

(ii) 100 விழுக்காட்டிற்கு சற்றே குறைவான பார்வைத்திறன் மற்றும் செவித்திறன் குறைபாடுள்ள மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்களுக்கு இப்பயிற்சி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கக் கோரும் கருத்துருக்கள் ஒவ்வொன்றும் மாவட்ட மருத்துவக் குழுவினரின் பரிந்துரையின் அடிப்படையில் துறைத் தலைவர்களால் பரிசீலிக்கப்பட்டு, அரசு மட்டத்தில் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறான கருத்துருக்கள் மீது இறுதி ஆணை பிறப்பிக்கும் முன்னர் தொடர்புடைய நிர்வாகத் துறைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் ஒத்திசைவு பெற வேண்டும்.

(iii) பத்தி 4 (i) மற்றும் (ii)-ல் குறிப்பிட்ட வகையிலில்லாத, இதர வகையிலான மாற்றுத்திறனாளிகளுக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நடைமுறையையே தொடர்ந்து பின்பற்றலாம்.

5) மேலே பத்தி 4-ல் வெளியிடப்பட்ட ஆணைகளுக்கு ஏற்ப தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளுக்கு உரிய திருத்தம் தனியே வெளியிடப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சீ. ஸ்வர்ணா,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
பயிற்சித் துறைத் தலைவர்,
'மகிழம்பூ'
எண்.163/1, பி.எஸ். குமாரசாமி இராஜா சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பி) துறை,
சென்னை-600 009. (தமிழ் நாடு அமைச்சுப்பணி விதிகளுக்கு உரிய திருத்தம் வெளியிடும் பொருட்டு)
தலைவர், பார்வைக் குறைபாடுள்ள மாற்றுத்திறனாளி அரசு ஊழியர் நலச் சங்கம், சென்னை-600 094.
மாவட்ட வருவாய் அலுவலர் / முதல்வர்,
அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர், ஈரோடு மாவட்டம்-638 451.
அனைத்து துறைத் தலைவர்கள் / அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட நீதிமன்றங்கள்.
தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
எண்.3, ப்ரேசர் பாலச் சாலை, வ.உ.சிநகர், சென்னை-600 003.

<u>நகல்:-</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர்-III, சென்னை-600 009.
மாண்புமிகு அமைச்சர் (மீன் வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை-600 009.
அரசுச் செயலாளரின் தனிச் செயலர்,
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-600 009.
அரசுச் செயலாளரின் தனிச் செயலர்,
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி-1) துறை, சென்னை-600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (கணினி / நி.சீ.II) துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

சி. மேபல் ஜெனாதன்ஸ்
பிரிவு அலுவலர்
19/1/18